Form-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 29/2011

Deposition of witness for: PW - 6

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயக்குமார் | Father/Husband Name | : நடராஜன் |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 14.05.2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
of the 14 day of 05.2026.

**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**அரசுதரப்பில் முதல்விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி 2012ம் ஆண்டு பணிஓய்வு பெற்று மதுரையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 2010 நான் கீழவளவு காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியாற்றி வந்தேன். கடந்த 21.03.2010ம் தேதி 13.00 மணிக்கு நான் ரோந்து பணியில் இருந்தபோது காவல் நிலையத்திலிருந்து எனக்கு கிடைத்த தகவலின்படி மேலூர் அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கு சிகிச்சையில் இருந்த ராஜேஷ்வரியை பார்த்து விசாரித்த அவர் வாக்குமூலத்தை பதிவு செய்து 13.30 மணிக்கு காவல் நிலையத்திற்கு வந்து நிலைய குற்ற எண் 72/2010 பிரிவு 447, 294(b), 323 இதசன்கீழ் வழக்கு பதிவு செய்தேன். **( அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ3ஆக குறியீடு செய்யப்படுகிறது ).**

அன்றையதினமே சம்பவ இடம் சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டு தெய்வேந்திரன் மற்றும் அசோகன் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **( அந்த மாதிரி வரைபடம் முறையே**

**அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பார்வை மகஜர் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

அன்றையதினமே சம்பவ சாட்சிகள் பஞ்சு, தேவர், ஞானசக்தி ஆகியோர்களை தனி தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகள் தலைமறைவாகிவிட்டதனால் அவர்களை கைது செய்யவில்லை. அதன்பின்னர், 18.09.2010ம் தேதி காயம்பபட்ட நபருக்கு சிகிச்சை அளித்த மேலூர் அரசு மருத்துவர் திரு. நாராயணன் என்பவரை விசாரித்தேன். அதில் அவர் ராஜேஷ்வரிக்கு சம்பவத்தில் இடது கையிலும், உடம்பிலும் ஊமைக்காயங்கள் இருப்பதாகவும், அதனால் அவருக்கு ஏற்பட்ட காயம் சிறுகாயம் என்று சான்று வழங்கினார் **(அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று அசாஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது ). (எதிரி தரப்பில் மருத்துவரை விசாரிக்காமல் அவர் வழங்கிய ஆவணத்தை குறியீடு செய்யப்பட கூடாது என்று ஆட்சேபணையுடன் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது ). (அரசுதரப்பில் குவிமுச பிரிவு 294ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு எதிரிதரப்பில் ஆட்சேபணையுடன் மனு அனுமதிக்கப்பட்டுள்ளது ).**

அதன்பின்னர் 20.10.2010ம் தேதி எனது புலன்விசாரணை முடித்துக்கொண்டு எதிரிகள் மீது பிரிவு 447, 294(b), 323 இதசன்கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரிகள் ஆஜர்**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

புகார்தாரர் எவ்வாறு புகார் கொடுத்தார் என்றால் புகார்தாரர் புகார் வாக்குமூலம் கொடுத்தார். நான் புகார்தாரரிடமிருந்து எந்த வாக்குமூலமும்

பெறவில்லை, அவரிடம் வெறும்தாளில் மட்டும் கையொப்பம் பெற்று வந்தேன் என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கின் முதல்தகவல் அறிக்கை எந்த தேதியில் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன் என்றால் 21.03.2010ம் தேதி அனுப்பினேன். எனக்கு காவல் நிலையத்திலிருந்து யார் தகவல் தெரிவித்தார் என்றால் சுரேஷ் என்ற காவலர் எனது கைப்பேசி மூலம் தகவல் சொன்னார். அந்த சுரேஷ் காவலரை நான் இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கில் காயம்பட்ட நபர் மதுரை அரசு மருத்துவமனைக்கு சென்றாரா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை, பார்வை மகஜர் சாட்சிகளை விசாரிக்கவும் இல்லை என்றால் சரியல்ல. நான் இவ்வழக்கு சம்மந்தமாக எந்த சாட்சிகளையும் விசாரிக்கவில்லை, புகார்தாரர் கொடுத்த சாட்சிகளை கொண்டு நானாகவே ஆவணங்கள் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

2) இவ்வழக்கின் 3ம் எதிரியை புகார்தாரர் அடித்ததாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது, அதற்கு நான் முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேனா என்றால் அவ்வாறு எந்த புகாரும் நான் பெறவில்லை. 3ம் எதிரி மின்னல்கொடி புகார்தாரர் அடித்ததனால் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அவர் எனது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரியல்ல. 3ம் எதிரி மதுரை மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் புகார் கொடுத்த புகாரை விசாரித்து இவ்வழக்கின் புகார்தாரர் கொடுத்த புகார் பொய் என்றும், 3ம் எதிரி கொடுத்த புகார் உண்மை என்று முடிவு கண்டறிந்து இவ்வழக்கை முடிக்க சொல்லி எனக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், புகார்தாரருக்கும் இடையே உரிமையியல் வழக்கு

மாண்புமிகு மேலூர் சார்பு நீதிமன்றத்தில் OS No. 731/2008 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கில் சம்பவம் நடந்த இடம் எதிரிகளின் பூர்விக சொத்து என்பதனால் இதச பிரிவு 447 வராது என்றால் சரியல்ல. இவ்வழக்கில் இதச பிரிவு 294(b) வீட்டு வாசலில் நடந்ததால் அது இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றால் சரியல்ல. நான் எந்த சாட்சியும் விசாரிக்காமல், புகார்தாரர் சொன்னதனால் எதிரிக்கு எதிராக இவ்வழக்கு தாக்கல் செய்து, பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.